# பாடம் 1 - காவல்காரன்

## வகுப்பு : IV

## பாடம் : தமிழ்

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. 'பெயரில்லாத' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.....................

அ) பெயர் + இலாத ஆ) **பெயர் + இல்லாத**

இ) பெயரில் + இல்லாத ஈ) பெயரே + இல்லாத

2. வைக்கோல் மேலே துணியைச் சுற்றி வைத்திருக்கும் பொம்மை இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் எதிர்ச்சொல்.....................

அ) **கீழே** ஆ) அருகில் இ) தொலைவில் ஈ) வளைவில்

3. 'சோளக்கொல்லைப் பொம்மை என்பது____________

அ) உயிருள்ள பொருள் ஆ) **உயிரற்ற பொருள்**

இ) இயற்கையானது ஈ) மனிதன் செய்ய இயலாதது

4. அசைய + இல்லை - இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது...................

அ) அசைய இல்லை ஆ) அசைவில்லை

இ) **அசையவில்லை** ஈ) அசையில்லை

5. நித்தம் - இச்சொல்லுக்குரிய பொருள்........................

அ) **நாளும்** ஆ) இப்பொழுதும் இ) நேற்றும் ஈ) எப்பொழுதும்

### ஆ. வினாக்களுக்கு விடையளிக்க

**1. தோட்டத்தின் நடுவே ராஜா போல் நின்றவர் யார்?**

தோட்டத்தின் நடுவே ராஜா போல் நின்றவர் சோளக்கொல்லைப் பொம்மையாகிய காவல்காரர்.

**2. காவல்காரருக்குத் தோட்டத்தில் உள்ள பணி யாது?**

காவல்காரருக்குத் தோட்டத்தில் உள்ள பணி, இரவும் பகலும் வயலில் நின்று காவல் காப்பதாகும்.

**3. பொம்மைக்குக் கறுப்புக்கோட்டு, வெள்ளைச்சட்டை கொடுத்தது யார்?**

பொம்மைக்குக் கறுப்புக்கோட்டு, வெள்ளைச்சட்டை கொடுத்தது காகம்.

**4. காகம் கொடுத்த ஆடைகளைக் காவல்காரர் ஏன் அணியவில்லை?**

காவல்காரர் உயிரற்ற பொருள் என்பதால் காகம் கொடுத்த ஆடைகளைக் காவல்காரர் அணியவில்லை.

## இ. முதலெழுத்து ஒன்று போல் வரும் சொற்களை எழுதுக

1. சட்டை - சரிகை
2. காவல் - காலை
3. இதனை - இந்த
4. கூட்டம் - கூடை

## ஈ. மேகங்களுக்குப் பொருத்தமான மழைத்துளிகளை இணைக்க .




1. சரிகை வேட்டை
2. கறுப்புக் கோட்டு
3. வெள்ளைச் சட்டை
4. சோளக் கொல்லைப் பொம்மை
5. கனத்த மழை.

## உ. பாடலைத் தொடர்ந்து பாடுவோமா?

மக்கள் ஒன்று கூடியே
மகிழ விரும்பும் திருவிழா
குழந்தைச் செல்வம் யாவுமே
கூடிஆடும் திருவிழா
குமரிப் பெண்கள் யாவரும்
கூடிமகிழும் திருவிழா
கடைத் தெருக்கள் முழுவதும்
கலைகட்டும் திருவிழா.

## ஊ. உரைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக

நமக்குப் பயன்தரும் பல மரங்களுள் வாழையும் ஒன்று. வாழையின் பூ, காய், கனி, தண்டு ஆகியவற்றை நாம் சமைத்து உண்கிறோம். வாழைநாரைக் கொண்டு பூக்களைத் தொடுக்கிறோம். திருமண விழாக்களிலும் வீட்டில் நடைபெறும் விழாக்களிலும் வாழையிலையில் விருந்து படைக்கின்றனர். வாழையில் செவ்வாழை, பூவன் வாழை, மலை வாழை எனப் பலவகைகள் உள்ளன.

1. வாழையின் எப்பகுதிகள் உணவாகப் பயன்படுகின்றன?

   பூ, காய், கனி, தண்டு



2. வாழைநார் எதற்குப் பயன்படுகிறது?

   வாழைநார் பூத்தொடுக்கப் பயன்படுகிறது

3. வாழையின் வகைகளுள் இரண்டை எழுதுக.

   செவ்வாழை, பூவன் வாழை

4. வாழையிலை - இச்சொல்லைப் பிரித்து எழுதுக.

   வாழை + இலை

5. பலவகை - இச்சொல்லுக்கு எதிர்ச்சொல் எழுதுக.

   சிலவகை.

AKSHAYA ACADEMY MATRIC. Hr. Sec. SCHOOL KOSAVAPATTY KNOWLEDGE IS POWER